


කතිරයේ බලය

புள்ளடியின் பலம்

தொகுதி 3 | இதழ் 1 | தேர்தல் ஆணைக்குழு | ஜனவரி – ஏப்ரல் 2019


# தேர்தல் எல்லை நிர்ணயத்தின் போது உருவாகுகின்ற நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடுகள் நிர்ணயித்தல் (Gerrymandering) அநீதியான முறையில் தொகுதிகள் பிரித்தல் (Malapportionment) மற்றும் அலபாமா முரண்பாடு (Alabama Paradox)


எல்லை நிர்ணய ஆணைக்குழுத் தவிசாளர் – கலாநிதி கே. தவலிங்கம்

இணைப்புச் செயலாளர் திரு. நலின் சேமகே


## தேர்தல் மாவட்ட எல்லைகளின் நிர்ணயங்கள் (Delimitation)

இரண்டு மாவட்டங்களுக்கிடையில் இருக்க வேண்டிய பொதுவான எல்லைகள் பற்றிக் கலந்தாலோசித்து, எல்லைக் கோடுகள் பற்றி தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் அவற்றை ஆவணப்படுத்துகின்ற சட்ட நடவடிக்கைகளே எல்லை நிர்ணயங்கள் என அழைக்கப்படுகின்றது. எல்லைகள் நிர்ணயிக்கப்படும் போது சொற்களால் (ஆவணங்கள் மூலம்) குறிப்பிடப்படுவதுடன், வரைபடங்களிலும், குறிப்பேடுகளிலும் ரேகைகளினால் குறியீடு செய்யப்படுகின்றது.

எல்லைகள் குறியீடு செய்தல் என்பது வெளிக்கள நடவடிக்கையொன்றாகும். ஏதாவதொரு எல்லையைப் பற்றி அனைவரும் கண்கூடாகக் காணக்கூடியவாறு குறிப்பிட்டுக் காட்டுதல் எல்லைகளைக் குறியீடு செய்தலின் நோக்கமாகும். இச்செயற்பாட்டின் ஆரம்ப கட்டம் அளத்தலில் தொடங்குகின்றது. நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்ட இடங்களில் குறியீடுகளையிட்டுக் கொள்ளல் அல்லது தரையமைப்பினை இனங்கண்டு கொள்ளல் என்னும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறாயினும் இச்செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் எப்போதும் மிகத் தெளிவானதாக இருக்கவில்லையென்பதுடன், மேற்கூறப்பட்ட இரண்டு கட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் இன்னும் காணப்படுகின்றன. பொதுவாக எல்லை நிர்ணய நடவடிக்கைகளின் போது குறியீடுகளிடும் நடவடிக்கைகளைப் பற்றிய அறிவு எல்லை நிர்ணயக் குறியீடுகள் இடுவோருக்கு உண்டு.

## எல்லை நிர்ணயங்களின் வகைகள்

- தேசிய எல்லை நிர்ணயங்கள் (அரசாங்கத்தின் வெளி 'எல்லைகள்' சட்டரீதியாக அமைத்தல்)
- சமுத்திர எல்லை நிர்ணயங்கள் (சமுத்திர எல்லைகள் தொடர்பாக நாடுகளுக்கிடையில் உருவாகும் சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் தேசிய எல்லை நிர்ணயம்)
- எல்லைக் கோடுகளின் நிர்ணயங்கள் (நியதிச்சட்ட நிறுவனமொன்று அமைந்துள்ள நாட்டில் அல்லது பிரதேச தொகுதிகளில் எல்லைக் கோடுகள் குறிக்கப்படும் செயற்பாடு)

தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயித்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே இக்கட்டுரையின் முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

## எல்லைக் கோடுகள் நிர்ணயித்தல்

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு நியதிச்சட்ட நிறுவனமொன்று அமைந்துள்ள நாட்டில் அல்லது பிரதேசத் தொகுதிகளில் எல்லைக் கோடுகள் குறிக்கப்படும் செயற்பாடுகளே "தொகுதி எல்லை நிர்ணயம்" எனக் கருதப்படுகின்றது. இந்த எல்லை நிர்ணய நடவடிக்கைகள் ஏதேனுமோர் பொறுப்பு மிக்க நிறுவனத்திற்குக் கையளிக்கப்படுகின்றது. இவ்வாறான நிறுவனம் எல்லை நிர்ணய ஆணைக்குழு அல்லது எல்லைக் கோடுகள் தொடர்பான ஆணைக்குழு என அழைக்கப்படும். தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் குறியீடு செய்யும் நடவடிக்கைகளே எல்லை நிர்ணயங்கள் என அழைக்கப்படுகின்றன. மாகாணங்கள், நிருவாக மாவட்டங்கள், பிரதேச நிருவாகத் தொகுதிகள், உள்ளூரதிகார சபைப் பிரதேசங்கள் ஆகியவற்றை வேறு பிரித்துக் காட்டும் செயற்பாட்டினை விளக்கிக் கூறுகின்ற சொற்பதமாக எல்லை நிர்ணயம் என்பது அமைந்துள்ளது.

## இலங்கையில் (சட்டரீதியான) எல்லை நிர்ணய வகைகள்

- மாகாண மற்றும் நிருவாக மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்
- பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம்
- உள்ளூரதிகார சபைகளின் எல்லை நிர்ணயம்.
- உள்ளூரதிகார சபைகளில் உள்ள வாக்கெடுப்பு வட்டாரங்களின் எல்லை நிர்ணயம்
- மாகாண சபைகளில் உள்ள வாக்கெடுப்பு மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்
- பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்.

## அரச சேவை அதிகாரப் பிரதேசங்கள்

இலங்கையில் அரச நிருவாகத்தை மேற்கொள்வதற்கான ஒவ்வோர் அரச நிறுவனமும் வெவ்வேறு வலயங்கள், பிரதேசங்கள், வட்டாரங்கள் ஆகியவற்றை வகுத்துக் கொண்டுள்ளன. அவற்றுள் 340 வைத்திய அதிகாரி வட்டாரங்களும், 311 கல்வி வட்டாரங்களும், 439 பொலிஸ் வட்டாரங்களும் அமைந்துள்ளன. இவ்வட்டாரங்கள் கிராம அலுவலர் பிரிவுகளினதும், பிரதேச செயலகப் பிரிவுகளினதும் எல்லைகளைத் தாண்டிய நிலையிலும் உள்ளன.

## தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயம்

- அரசியல் உரிமைகள் மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் குறிப்பு
- தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளைக் குறியீடு செய்யும் நடவடிக்கைகளால், வாக்காளர்கள் தமது வாக்கினைப் பிரயோகிக்கும் செயற்பாடுகளின் போது அசௌகரியங்களை ஏற்படுத்தாது இருத்தல் வேண்டும். எந்தவொரு இனக் குழுமத்தினருக்கும் அநீதியிழைக்கப்படலாகாது. நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடு நிர்ணயித்தலாக இருத்தலாகாது. (Gerrymandering)
- வாக்காளர் : உறுப்பினர் எண்ணிக்கையினுள் விகிதாசாரம்.
- ஒரு வாக்காளரது வாக்கின் பெறுமதியும் இன்னொரு வாக்காளரின் வாக்கின் பெறுமதியும் சமமானதாக இருத்தல் வேண்டும். அநீதியான முறையில் வாக்கெடுப்பு மாவட்டம் பிரித்தலாக இருத்தலாகாதென்பதே இதன் அர்த்தமாகும். (Malapportionment)

## நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடுகள் நிர்ணயித்தல் என்பதன் மூலம் கருதப்படுவது யாது? (Gerrymandering)


ஏதேனுமோர் அரசியற் கட்சிக்கு மற்றுமோர் அரசியல் கட்சியை விடக் கூடுதலான ஆசனங்கள் கிடைக்கின்றவாறு எல்லை நிர்ணயம் செய்தலானது, நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடு நிர்ணயித்தல் என்பதன் மூலம் கருதப்படுகின்றது.

நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடுகள் நிர்ணயித்தல் (Gerrymandering) எனப்படும் முறை 1810 – 1812 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மெசவுசெட்ஸ் என்னும் பிராந்தியத்தின் ஆளுநராகக் கடமையாற்றிய எல்ப்ஜி ஜெரி என்பவர் காரணமாக பயன்பாட்டுக்கு வந்துள்ளது. ஆளுநர் ஜெரி என்பவர் தனது ஆட்சிக் காலத்தின் போது எதிர்க்கட்சியாகிய பெடரல் கட்சியை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியவாறு தனது கட்சியாகிய றிபப்ளிகன் கட்சிக்குச் சாதகமான முறையில் தனது குடியிருப்பின் மீள் எல்லை நிர்ணயம் தொடர்பான சட்டத்தில் கையொப்பமிட்டார். இதன் காரணமாக ஒரு காங்கிரஸ் பிரதேசம் நெருப்பில் வாழும் செலமெண்டர் எனப்படும் உயிரினத்தின் வடிவத்தைப் பெற்றது. பெடரல் கட்சியைச் சேர்ந்த ஒருவர் "இல்லை அந்தப் பிரதேசம் ஒரு ஜெரிமெண்டர் ஆகும்." (ஆளுநர் ஜெரி + செலமெண்டர்) என்ற கருத்துப்படக் கூறினார். இந்தச் செய்தி உடனடியாக அனைத்துச் செய்தித் தாள்களிலும் ஆசிரியர் தலைப்பு மற்றும் கார்டூன் சித்திரங்களில் பிரசுரமாகின. அன்று தொடக்கம் இவ்வாறான சம்பவங்களை ஜெரிமெண்டர் என்னும் சொல்லுடன் இணைத்து அறிமுகப்படுத்தினர்.

ஐம்பது (50) பேர் அடங்கியதோர் சிறிய குடியிருப்பு உள்ளதென நாம் நினைத்துக் கொண்டால், அவர்களுள் முப்பது பேர் B என்னும் கட்சிக்கும், ஏனைய இருபது பேரும் R என்னும் கட்சிக்கும் உரியவர்களாவர். (1ஆம் குறிப்பைப் பார்க்கவும்.)

இக்குடியிருப்பினை ஐந்து தொகுதிகளாகப் பிரித்தால், ஒவ்வொரு பிரிவிலும் உள்ள சனத்தொகையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக ஒரு பிரிவிற்கு ஒரு உறுப்பினர் வீதம் நியமிக்கப்படுவர். குறித்த நியமனம் விகிதாசார முறையில் இருத்தல் வேண்டும். அதாவது நூற்றுக்கு அறுபது வீதமான மக்கள் B என்னும் கட்சிக்கும், நூற்றுக்கு நாற்பது வீதம் R என்னும் கட்சிக்கும் உரியதாக இருந்தால் குறித்த ஐந்து தொகுதிகளுக்கும் அவ்வாறே பிரிக்கப்படல் வேண்டும்.


**குறிப்பு – 1**



50 பேர் கொண்ட பிரதேசம்
B கட்சி 60%
R கட்சி 40%

**குறிப்பு – 2**


முழுமையான நியமனம்



05 வட்டாரம்
B கட்சி – 3
R கட்சி –2
B கட்சி வெற்றியீட்டுகின்றது

**குறிப்பு – 3**


வகுக்கப்பட்டதெனினும், நியாயமற்ற முறை



05 வட்டாரம்
B கட்சி – 5
R கட்சி – 0
B கட்சி வெற்றியீட்டுகின்றது.

**குறிப்பு – 4**

வகுக்கப்பட்டதுமல்ல நியாயமானதுமல்ல



05 வட்டாரம்
R கட்சி – 3
B கட்சி – 2
R கட்சி வெற்றியீட்டுகின்றது

2 தொடக்கம் 4 வரையுள்ள குறிப்புக்களில் கூறப்பட்டுள்ளவாறு தேர்தல் தொகுதிகள் பிரிக்க முடியும். குறிப்பு 2 இன் மூலம் காட்டப்பட்டுள்ள எல்லை நிர்ணயமானது, முழுமையான நியமனத்திற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பு 3 இன் மூலம் எல்லை நிர்ணயம் வகுக்கப்பட்டுள்ளதெனினும், நியமனங்கள் முறையற்றதாகும். குறிப்பு 4 இன் மூலம் எல்லை நிர்ணயம் வகுக்கப்படாதென்பதோடு, முறையற்றதுமாகும்.

விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் அடிப்படையில், அரசியல் கட்சிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதுடன், நியாயமற்ற முறையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளதுடன், ஒருபோதும் இடம்பெற மாட்டாது. நியாயமற்ற முறையிலான எல்லைக் கோடுகள் நிர்ணயித்தல் (Gerrymandering) எனப்படும் முறையானது, பெரும்பாலும் விகிதாசாரமற்ற முறையின் கீழ் இடம்பெறுகின்றது.

பெரும்பான்மையைப் பெறுகின்ற கட்சி மட்டும் வெற்றி பெறுவதுடன், நியமனங்கள் (தொகுதிவாரி முறையிலான) ஒரு சில கட்சிகளுக்கே கிடைக்கப் பெறுகின்றன. நியாயமான எல்லை நிர்ணயத்தை உறுதிப்படுத்தக்கூடிய சர்வதேச ரீதியான இணக்கப்பாட்டுடனான செயற்பாடு காணப்படுவதில்லை.

## அனைத்து நபர்களும், அனைத்து வாக்குகளும் பெறுமதி உடையவை (தொகுதி பிரித்தல்)

மிகவும் எளிமையானதும், உலகளாவியதுமான இந்த அடிப்படைக் கோட்பாடு ஒவ்வொரு தனிநபரின் பெறுமதியான

வாக்குரிமை அனைவருக்கும் சமமானது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. நியாயமற்ற முறையில் எல்லைகளை நிர்ணயித்தல் தொடர்பாக மேலே உள்ள பந்தியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளவாறு தேர்தல் தொகுதிகளில் சமமான வாக்குகள் இருப்பதைக் காண முடிந்தது. தேர்தல் முடிவுகளை மாற்றியமைப்பதற்கு ஏற்றவாறு அமைந்திருப்பது ஒரேயளவான நிலப்பரப்புடையதாக தேர்தற் தொகுதிகளின் எல்லைகளை மாற்றியமைத்திருப்பதாகும். சமமற்ற எண்ணிக்கையான வாக்குகள் உள்ளடங்குகின்ற முறையில் தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயித்தல் நியாயமற்ற முறையான எல்லை நிர்ணயமாகாது. (Gerrymandering) இந்த முறை அநீதியான எல்லை நிர்ணயமாகவும் அமையாது. (Malapportionment)

முறையற்ற வகையில் எல்லை நிர்ணயித்தல் (Malapportionment) முறை பெரும்பாலும் வாக்காளர்கள் – முகவர்கள் ஆகியோரின் விகிதாசாரம் வேறுபட்டதாக அமைந்திருக்கும் சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. உதாரணமாக ஒரு தேர்தல் தொகுதியில் 10,000 வாக்காளர்களும், மற்றையதொரு தேர்தல் தொகுதியில் 100,000 வாக்காளர்களும் இருந்தால், முதலில் குறிப்பிட்ட தேர்தல் தொகுதியின் வாக்காளரொருவருக்கு ஆளும் தரப்பினர் தொடர்பாக 10 மடங்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியும். தனிநபர் நியாயத்தை ஒதுக்கி வைத்து குழுச் சமத்துவத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டு முறையற்ற விதத்தில் திட்டமிட்டு எல்லைகள் நிர்ணயிப்பதற்கு வழிவகுக்கப்படலாம்.

முறையற்ற விதத்திலான எல்லை நிர்ணயத்தின் (Malapportionment) பாதக விளைவுகள் நியாயமற்ற விதத்திலான எல்லை நிர்ணய (Gerrymandering) முறையைப் போன்றே வலுவானதாகும். கீழே காணப்படும் எளிய உதாரணத்தில் மூன்று வாக்காளர்கள் உள்ள இரண்டு தேர்தல் தொகுதிகளும், ஆறு வாக்காளர்கள் உள்ள ஒரு தேர்தல் தொகுதியும் உள்ளன.

**(வாக்காளர்கள்)**

| | | |
|---|---|---|
| A | B | B |
| A | B | B |
| A | A | B |
| A | A | B |

மிக விசாலமான தேர்தல் தொகுதியொன்றில் வேட்பாளரொருவர் வெற்றி பெற வேண்டுமாயின் மிகச் சிறிய தேர்தல் தொகுதிகள் இரண்டின் வேட்பாளர்கள் பெறுகின்ற வாக்குகளைப் போன்று இருமடங்கு வாக்குகள் பெற்றிருத்தல் வேண்டும். மற்றுமொரு வகையில் கூறுவதானால், சிறிய தேர்தல் தொகுதியின் ஒரு வாக்கு பெரிய தேர்தல் தொகுதியின் இரண்டு வாக்குகளுக்குச் சமமானதாகவும் பெறுமதியானதாகவும் உள்ளது. வாக்குகளுக்கு பல்வேறு வகையில் பெறுமதி சேர்க்கப்படுகின்றதுடன், அனைத்து வாக்குகளுக்கும் சமனான பெறுமதி வழங்கப்படல் வேண்டும். அநீதியான முறையிலான எல்லை நிர்ணயம் (Malapportionment) என்னும் முறையினூடாக வாக்கின் சமத்துவத்தன்மை என்னும் கோட்பாடு மீறப்படுகின்றது. மேலே காட்டப்பட்டுள்ள உதாரணத்தின் பிரகாரம், B கட்சி ஒரு தொகுதியில் வென்றுள்ளதுடன், B கட்சி பெற்றுக் கொண்டுள்ள அதே எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுள்ள A கட்சி இரண்டு தேர்தல் தொகுதிகளை வெல்லும்.

## அலபாமா முரண்பாடு (Alabama Paradox)

தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை கூடும்போது (சனத்தொகையில் மாற்றமில்லாது) ஒரு கட்சிக்கு உரிய தொகுதிகளின் எண்ணிக்கை குறைவடைகின்ற நிலையை அலபாமா முரண்பாடுகள் எனக் கருதப்படுகின்றன.

அலபாமா முரண்பாடு முதன்முதலாக 1873 ஆம் ஆண்டில் சனத்தொகையுடன் தொடர்புடைய விடயத்தில் உருவாகியுள்ளது. பிரதிநிதிகள் சபையில் 270 ஆசனங்கள் இருந்த போது றொட் ஐலண்ட் என்னும் தொகுதிக்கு இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் பிரதிநிதிகள் சபையின் ஆசனங்களின் எண்ணிக்கை 280 ஆக உயர்த்தப்பட்ட போது றொட் ஐலண்ட் தொகுதிக்குரிய உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றாகக் குறைவடைந்தது. 1880 ஆம் ஆண்டில் சனத்தொகை கணிப்பீட்டின் பின்னர் உறுப்பினர் எண்ணிக்கை 275 இலிருந்து 350 ஆக அதிகரிக்கப்பட்டபோது அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் சனத்தொகை மதிப்பீட்டு அலுவலகத்தின் தலைவராகிய திரு. சீ.டப். சியட்டன் என்பவர் உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்துள்ளார். அவர் காங்கிரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பிரதிநிதிகள் சபையின் ஆசனங்களின் எண்ணிக்கை 299 ஆக இருப்பின், அலபாமா தொகுதிக்கு 8 ஆசனங்கள் கிடைக்குமெனவும், ஆசனங்களின் எண்ணிக்கை 300 ஆக இருப்பின், அலபாமா தொகுதிக்கு 7 ஆசனங்கள் மாத்திரமே கிடைக்குமெனவும் குறிப்பிட்டுள்ளார். இதன் பிரகாரம் அலபாமா தொகுதிக்குக் கிடைக்கப் பெறும் ஆசனங்கள் ஒன்றால் குறைவடைவதன் காரணமாக, இந்த முரண்பாட்டிற்கு அலபாமா முரண்பாடு என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று. கீழே காணப்படும் உதாரணம் இந்த முரண்பாட்டினை விளக்குகின்றது.

| குடியிருப்பு | சனத்தொகை | ஆசனங்கள் 10 | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப்பங்கு | ஆரம்பத்தில் | இறுதியில் |
| A | 6 | 4.286 | 4 | 4 |
| B | 6 | 4.286 | 4 | 4 |
| C | 2 | 1.426 | 1 | 2 |
| | | | | ஆசனங்கள் 10 |

| குடியிருப்பு | சனத்தொகை | ஆசனங்கள் 11 | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப்பங்கு | ஆரம்பத்தில் | இறுதியில் |
| A | 6 | 4.714 | 4 | 5 |
| B | 6 | 4.714 | 4 | 5 |
| C | 2 | 1.571 | 1 | 1 |
| | | | | ஆசனங்கள் 11 |

ஆசனம் 10 A மற்றும் B குடியிருப்பு $10*6/14 = 4.286$

குடியிருப்பு – C $10*2/14 = 1.429$

ஆசனம் 11 A மற்றும் B குடியிருப்பு $11*6/14 = 4.714$

குடியிருப்பு – C $11*2/14 = 1.571$

ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் பெரிய குடியிருப்புக்களின் ஆசன அனுமதிப்பங்கு, சிறிய குடியிருப்புக்களின் ஆசன அனுமதிப்பங்கை விட வேகமாக அதிகரிக்கும். இங்கு சிறிய குடியிருப்பாகிய C குடியிருப்பை விட A மற்றும் B குடியிருப்புக்களின் அனுமதிப்பங்கு அதிகரித்துள்ளது. ஆகையால் A மற்றும் B குடியிருப்புக்களின் அனுமதிப்பங்கின் அரைப்பகுதி மற்றும் தசம பகுதி C குடியிருப்பின் குறித்த பகுதியை விட வேகமாக அதிகரித்துள்ளது. உண்மையாகவே மேற்குறிப்பிட்ட குடியிருப்புக்கள் C குடியிருப்பின் அரைப்பகுதியை மிஞ்சியுள்ளது. ஹெமில்டன் முறையின் பிரகாரம் ஆகக்கூடிய அரைப்பகுதியைப் பெற்றுள்ள குடியிருப்பு எதுவென பகுப்பாய்வு செய்து பார்க்குமிடத்து, C குடியிருப்பிற்குக் கிடைக்க வேண்டிய ஆசனங்கள் இழக்கப்பட்டுள்ளன.




## "STORIES OF DEMOCRACY"

# SHORT FILM COMPETITION & FESTIVAL 2019

### Open Category

1 PRIZE Rs125,000

2 PRIZE Rs75,000

3 PRIZE Rs50,000

### School Category

1 PRIZE Rs50,000

2 PRIZE Rs30,000

3 PRIZE Rs20,000

### Language

Sinhala/ English/ Tamil or Silent

### Film Eligibility

| | |
|---|---|
| Length: | Maximum 5 minutes |
| Resolution: | HD (16:9) |
| Sound: | Sound must be greater than 128bit |
| Video Format: | MP4 (DVD Data Format) |

### Registration & Submission

Deadline - 31st July 2019

Film festival - 5th October 2019

Application and instructions can be downloaded from www.elections.gov.lk

### Finalists

The winners will be selected by an expert panel of judges. Selected short films will be screened on 8th June evening at "Tharangani Theatre".

REGISTRATION FREE

ELECTION COMMISSION OF SRI LANKA
MINISTRY OF EDUCATION
DEPARTMENT OF MASS COMMUNICATION, UNIVERSITY OF KELANIYA

"ಪೌರ"|"PAURA"

# "பிரஜை"

# குறுந்திரைப்பட விழா

## செயலமர்வுகளின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்



"இதுவரை குறு நாடகங்களின் திரைக்கதை வசனங்களுக்கேற்ப நடிப்பதற்கு மட்டுமே நான் அறிந்திருந்தேன். எனினும் இந்த நிகழ்ச்சியின் மூலம் திரைக்கதை வசனம், தயாரிப்பு, நடிப்பு ஆகியவை தொடர்பாக போதிய அறிவைப் பெற்றுக் கொண்டேன். அத்துடன் ஜனநாயகம், வாக்குரிமை போன்றவை தொடர்பாகவும் அறிந்து கொண்டேன். இவ்வாறான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

**பிலிமத்தலாவ ஸ்ரீ தேவானந்த வித்தியாலய மாணவி**
**வினலி பாக்யா வீரசிங்ஹ**

"இந்நிகழ்ச்சியின் மூலம் ஜனநாயகம் மற்றும் சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளும், அர்ப்பணிப்புக்களும் பற்றி அறிந்து கொண்டேன். ஜனநாயகமும் சர்வஜன வாக்குரிமையும் தொடர்பாக குரல் கொடுப்பதற்கும், எதிர்காலச் சந்ததியினரைத் தெளிவூட்டுவதற்கும் இக்குறுந்திரைப்பட விழா சிறந்த வாய்ப்பாக அமையுமென நான் கருதுகின்றேன்."

**கண்டி இந்து வித்தியாலய**
**மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை பாடப் பொறுப்பாசிரியர்**
**திருமதி. மகேஷா தொடம்பெல்ல**





"நாடகம் மற்றும் அரங்காட்டற்கலை எனக்கு மிகவும் பிடித்தமான பாடமாகும். நாம் தேர்ந்தெடுக்கின்ற ஆட்சியாளர்களால் ஜனநாயகம் முழுமையாக சிதைவடைகின்ற காலகட்டத்திலேயே நாம் இப்போது வாழ்ந்து வருகின்றோம். பாடசாலை மாணவர்களாகிய நாமும் நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்றோம். சிதைவடைந்துள்ள எதிர்காலத்திற்கு முகங்கொடுப்பது எவ்வாறென்பதைப் பற்றிச் சிந்திக்கின்றோம். அப்பயணப் பாதையை மாற்றியமைப்பதற்கு இக்குறுந்திரைப்பட விழா துணையாக அமையுமென நான் நம்புகின்றேன்."

**காலி அலோசியஸ் வித்தியாலய மாணவன்**
**தெஹான்**

"இந்த நிகழ்ச்சியின் மூலம் இதற்கு முன்னர் நாம் அறிந்திராத பல விடயங்கள் தொடர்பாக போதிய அறிவைப் பெற்றுக் கொண்டோம். ஜனநாயகம் பற்றியும், குறுந்திரைப்படம் என்றால் யாதென்பது பற்றியும், அவற்றின் நோக்கங்கள் மற்றும் எமது வாழ்வில் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் அறிந்து கொண்டோம்."

**பெந்தோட்டை காமினி தேசிய பாடசாலை மாணவி**
**பஞ்சாலி பியுமிகா**








# இலங்கையின்

## தேர்தல் செயன்முறையின் புதிய போக்குகள்

சன்ன பீ. த சில்வா
பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்)

ஆசியாவில் மிகவும் பழைமைவாய்ந்த சனநாயக நாடொன்றான இலங்கை, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துதல் மற்றும் உரிய முறையிலும் அமைதியாகவும் அதிகாரத்தை ஒப்படைத்தல் பற்றிய மெச்சத்தகு ஒரு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறாயினும், சனநாயகத்தின் பலம் தீர்மானிக்கப்படுவது தேர்தல்களை நடாத்துவதன்மூலம் மட்டுமல்ல என்பதுடன் தேர்தல் செயன்முறையில் பிரசையின் பங்கேற்பின் பரிமாணமும் அது தொடர்பில் கவனத்திலெடுக்கப்படவேண்டிய ஒரு காரணியாகும். வாக்குரிமைக்கான ஏற்பாடுகளைச்செய்யும் இலங்கையின் அரசியலமைப்பிற்கமைய ஒரு சமூகத்தில் வாழும் எல்லாக் குழுக்களுக்கும் தேர்தல் செயன்முறையில் முனைப்புடன் இணைந்து செயலாற்றுவதற்குள்ள உரிமைகளைச் செயலுருப்படுத்துவதற்கான ஆற்றல் வழங்கப்பட்டிருப்பின் மாத்திரம் சனநாயகம் உண்மையில் பயனுறலாம் என்பதை தேர்தல் ஆணைக்குழு புரிந்துகொண்டுள்ளது.

'மக்களின் இறைமை, சர்வசன வாக்குரிமை, அதனோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமான, நீதியான மற்றும் நம்பத்தகுந்த தேர்தல் செயன்முறையை வினைத்திறனும் விளைதிறனும் கொண்டதாக மேற்கொள்ளல்' என்பதை தனது பணிக்கூற்றாகக்கொண்டுள்ள தேர்தல் ஆணைக்குழு, 2017–2020 உபாயமுறைத் திட்டத்தில் தகுதியுள்ள எல்லாப் பிரசைகளும் உள்ளடங்கக்கூடிய தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இதன்கீழ் பிரசைகளை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், முதல் தடவையாக வாக்களிக்கும் வாக்காளர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள் முதலிய பொதுவாக குறைந்த பிரதிநிதித்துவத்தைக்கொண்ட குழுக்களுக்கு இக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவினால் அண்மைக்காலத்தில் அமுல்படுத்தப்பட்ட தகுதியுள்ள அனைவரையும் உள்வாங்குவதை நோக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த பின்வரும் விடயங்களுக்கு சிறந்ததொரு மீளாய்வை வழங்குவதுடன், இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தேர்தல் செயன்முறையில் பங்குபற்றுவதிலுள்ள தடங்கல்களைக் குறைப்பதும் அவ்வாறு செய்வதன்மூலம் தேர்தல் செயன்முறையில் தகுதியுள்ள எந்தவொரு வாக்காளரும் தவறவிடப்பட மாட்டார்கள் என்பதை உறுதிசெய்வதும் எதிர்பார்க்கப்படுகிறது

### வாக்களிக்கும்போது மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் தடங்கல்களை அகற்றுதல்

இலங்கை, 2016 ஆம் ஆண்டில் வலுவாக்கம் செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தின்மூலம் எல்லாவிதமான மாற்றுத்திறனாளிகளுக்கும் வாக்களிப்பதற்கும் தெரிந்தனுப்புவதற்கும் அரசியல் நீரோட்டத்தில் மிகவும் பரந்தளவில் தொடர்புபட்டுச் செயலாற்றுவதற்குமான உரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் அரசியல் உரிமைகளையும் அதற்கான பங்கேற்பையும் ஊக்குவிப்பதற்கு "இலங்கையின் மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கும் தேர்தல்கள் (DIESL)" என்னும் முனைப்பான தொழில்நுட்பக் குழுவொன்றை மாற்றுத்திறனாளிகளின் ஒழுங்கமைப்புகளுடன் இணைந்ததாக நிறுவ தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த DIESL குழுவுடன் ஒத்துழைத்துச் செயலாற்றி தேர்தல் ஆணைக்குழுவினால் 2018 உள்ளூரதிகார சபைத் தேர்தலுக்கு முன்னர் வாக்கெடுப்பு நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரவேசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதை இலக்காகக்கொண்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனத்துடன் இணைந்து செவிப்புலனற்றோரை இலக்காகக்கொண்டு அமுல்படுத்தப்பட்ட வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் 3000க்கும் அதிகமான தடவைகள் பரிமாறப்பட்டுள்ள, சுவரொட்டிகளும் சமூக ஊடகங்களும் வாயிலாக வெளிப்படுத்தப்பட்ட சைகை மொழிபெயர்ப்புகளுடன்கூடிய வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான 5 காணொளி நாடாக்களைத் தயாரித்து விநியோகிப்பதும் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் அடங்கியது.

மாற்றுத்திறனாளிகளின் தேர்தல் செயன்முறையுடன் தொடர்புபட்ட உரிமைகள் குறித்தும் தேர்தல் தினத்தன்று தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் குறித்தும் தகவல்கள் அடங்கிய காணொளி நிகழ்ச்சிகளை உருவாக்க மேற்குறிப்பிட்ட குழு தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து செயலாற்றியது.

மாற்றுத்திறனாளிகளான வாக்காளர்களுக்கு தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்தை எளிதில் அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக சிரேட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் இயல்திறன் விருத்தியின் பொருட்டு அத்தகைய அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சிகளிலும் கலந்துரையாடல்களிலும் தேர்தல் ஆணைக்குழு இந்த காணொளி நாடாக்களை விநியோகித்தது. இதற்கு மேலதிகமாக, வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறையில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய தரவுகளை மிகவும் முறைப்படியாக பெற்றுக்கொள்வதற்கான அணுகு வசதிகள் குறித்த தரவுகளைத் திரட்டும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை தெரிவுசெய்யப்பட்ட 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் அதாவது கொத்மலை, யட்டியாந்தோட்டை, வெல்லவாய மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அமுல்படுத்த தேர்தல் ஆணைக்குழு குறித்த ஒழுங்கமைப்புகளதும் குழுக்களதும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் செயலாற்றியுள்ளது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் வாக்கெடுப்பு நிலையங்களை அடையும் வசதிகள் குறித்த ஒரு கணக்காய்வை நடாத்துவதற்காக அடைவு வசதிகள் குறித்த வினாக்கொத்தொன்றைத் தயாரிப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழு செயலாற்றுகிறது. மேற்சொன்ன முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும் கணக்காய்வின் ஊடாகவும் குறித்த இலக்கிட்ட பிரதேசங்களில் மாற்றுத்திறனாளிகளான வாக்காளர்களின் விசேட கோரிக்கைகள், மாற்றுத்திறனாளிகளின் அணுகுவழிகளுடன் தொடர்புபட்ட தேவைகளை அடையாளம் காண்பதற்கும் அவ்வாறு செய்வதன்மூலம் தேர்தல்களுக்கு முன்னர் தேர்தல்களுடன் தொடர்புபட்ட குறித்துரைக்கப்பட்ட தேவைகளை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு வாய்ப்பு உருவாகும்.

## தேர்தல் செயன்முறையில் இளைஞர்களின் பங்கேற்பு

இலங்கையின் தேர்தல் செயன்முறையில் தேர்தல்களையும் அரசியல் ரீதியாக இளைஞர் யுவதிகள் வலுப்படுத்தப்படுவதையும் ஊக்குவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு பல்வேறு கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது. 2016 ஆம் ஆண்டில் முதல் தடவையாக வாக்களிக்கும் வாய்ப்பு உருவாகும் இளம் பரம்பரையினரின் சிவில் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு இளம் தலைமைத்துவக் குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழுவினால் சமூக ஊடகங்கள் வாயிலாக #YouthVoteSL நிகழ்ச்சித்திட்டம் நாடுபூராவும் அமுல்படுத்தப்பட்டது. 40 இளைஞர் ஒழுங்கமைப்புகளின் பங்கேற்புடனும் தேர்தல் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடனும் "Kites for Rights" எனும் தொனிப்பொருளின்கீழ் காலியில் நடைபெற்ற பட்டம்விடும் களியாட்ட விழாவொன்றில் சமூக ஊடகங்கள் வாயிலாக முடுக்கிவிடப்பட்ட மேற்சொன்ன #YouthVoteSL முன்னெடுப்பு சிறப்பாக இடம்பெற்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடக்கு, கிழக்கு, மத்திய மலைநாடு, தெற்கு மற்றும் கொழும்பில் சுமார் முந்நூறு இளைஞர் யுவதிகள் அதில் பங்குபற்றுவதற்காக காலியில் ஒன்றுகூடினர். நாடு முழுவதையும் உள்ளடக்கும் விதத்தில் நாள் பூராவும் நடைபெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரினால் முன்னெடுக்கப்பட்ட வாக்களிக்கும், வாக்கெண்ணும் மாதிரி நிகழ்ச்சித்திட்டமொன்றும் உள்ளடங்கியது. இளைஞர் யுவதிகளின் வாக்குரிமையை ஊக்குவிக்கும் செய்திகளைத் தாங்கிய அழகாக வடிவமைக்கப்பட்ட பட்டங்களை விடும் சிறப்பான நிகழ்ச்சியொன்றும் அதில் இடம்பிடித்தது.

இதற்கு மேலதிகமாக #YouthVoteSL நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்களினால் இலங்கையின் வருடாந்த தேருநர்களைக் கணக்கெடுக்கும் செயன்முறையில் 18 வயது பூர்த்தியடைந்த பல்லாயிரக்கணக்கானோரின் வாக்குரிமை மட்டுப்படுத்தப்படுவதாகத் தெரிவித்து அவர்களுக்கு தேர்தல் செயன்முறையில் பங்குபற்றும் வாய்ப்பை வழங்குமாறு கோரி தேருநர்களைப் பதிவுசெய்யும் செயன்முறையைச் சீரமைக்கும் தேவையை அதிகாரிகளுக்கு வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்குப் பதிற்குறியாக நடப்பிலுள்ள சட்டங்களில் அவசியமான திருத்தங்களைச் செய்யுமாறு கோரி இளைஞர் குழுக்களினால் மனுவொன்று தயாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் எல்லா வயதுப் பிரிவுகளிலும் நான்கு இலட்சத்தைத் தாண்டிய பிரசைகளின் கையொப்பங்களை அதற்கு வழங்கும் குறித்த மனுவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடமாகாணத்தின் ஓர் இளைஞர் குழுவினால் இது சம்பந்தமாக சட்டங்களில் அவசியமான திருத்தங்களைக் கொண்டுவருமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளும் கடமைகளும் குறித்து இளம் சமூகத்தினரை அறிவுறுத்தி அவர்களை தரப்பினர்களாக இணைத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் பல்வேறு இனப்பிரிவுகளையும் புவியியல் வலயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் தலைவர்களைக் கொண்ட இளைஞர் குழுவொன்றை உருவாக்குவதற்கும் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. வருடாந்த வாக்காளர் தினத்திற்கு ஒருங்கியையாக கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் 500க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த இளைஞர் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டன. சனநாயகமும் தேர்தல்களும், தேருநர்களைப் பதிவுசெய்யும் செயன்முறை, மகளிர் கோட்டா, இலங்கையில் தேர்தல் முறைகள் பற்றிய விழிப்புணர்வை விருத்திசெய்தல் என்பன பற்றி அறிவுறுத்துவது அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கிய நோக்கமாக அமைந்தது. மேலும், தத்தமது சமூகத்தில் சிவில் மற்றும் தேருநர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு அவசியமான திறன்களை விருத்திசெய்யும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழுவினாலும் இளைஞர் குழுவினாலும் 147 இளைஞர் யுவதிகளுக்கு இரண்டு சனநாயக இளைஞர் பாசறைகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

குறித்த இளைஞர் பாசறைகளில் பங்குபற்றியதைத் தொடர்ந்து அது தொடர்பாக சிறந்த பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளினால் அமுல்படுத்தப்பட்ட சமுதாய அடிப்படையிலான தேருநர்களை அறிவுறுத்தும் வேலைகளுடன் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் புதிதாக வந்திணைந்துகொண்டதுடன், தேருநர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் இளம் தலைவர்களின் பங்கேற்பின் முக்கிய தாக்கம் அதன்மூலம் துலாம்பரமானது.

### மகளிர் உரிமைகளும் பால்நிலையும்

சனநாயகத்தின் உறுதிப்பாட்டுக்கு தேர்தல் செயன்முறையில் முனைப்பான மகளிர் பங்கேற்பு இன்றியமையாத ஒரு காரணியாகும். மகளிருக்கான அனுமதிப்பங்கு முறையொன்றை அமுல்படுத்திய முதல் சந்தர்ப்பமான 2018 உள்ளூரதிகார சபைத் தேர்தல்மூலம் அரசியல் மற்றும் தேர்தல் செயன்முறையில் மகளிரின் பங்கேற்பை விருத்திசெய்ய அரியதொரு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு கிடைத்த இந்த வாய்ப்பிலிருந்து உரிய பயனை அடைந்துகொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழு மகளிருக்கான தேசிய குழுவுடன் இணைந்து மகளிர் சமூகத் தலைவிகளை இலக்கிட்ட தேருநர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. அத்தகைய மகளிர் தலைவிகளினால் 2018 உள்ளூரதிகார சபைத் தேர்தலை இலக்கிட்டு 2000க்கும் அதிகமான மகளிருக்கு சமுதாய அடிப்படையிலான தேருநர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, உள்ளூரதிகார சபைகளுக்கு தெரிந்தனுப்பிய மகளிர் உறுப்பினர்களுக்கு தமது சேவையை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதையும் அதனூடாக சனநாயகத்தைப் பலப்படுத்துவதையும் நோக்காகக்கொண்ட செயலமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

மேலும், சனநாயகம், சர்வசன வாக்குரிமை, பதிவு ஆகியன பற்றி தேருநர்களை அறிவுறுத்தும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் தோட்டப்புறம்வாழ் சமூகத்தினருக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டன. அவற்றில் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் மகளிராவர். உள்ளூரதிகார சபைத் தேர்தலுக்கு சில காலத்திற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் வாக்கெடுப்பு நடைபெறும் தினம் இடம்பெறும் மகளிர் மீதான தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் அவற்றைத் தணிப்பதற்கும் சட்ட அதிகாரமுள்ள பொலிஸார் மற்றும் ஏனைய தேர்தல் தரப்பினர்கள் குறித்த தகவல்கள் அடங்கிய கைந்நூலொன்றை எல்லா மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கும் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்ட பால்நிலையை அடிப்படையாகக்கொண்ட செயல்முனைப்புகளிடையே தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய நிறைவேற்று பெண் அலுவலர்களை ஆட்சேர்த்தல், பங்கேற்பு மூலோபாயத் திட்டமிடல் செயன்முறையில் பால்நிலை ஆகியன குறித்து அதிக கவனம் செலுத்துதல், பால்நிலை குறித்த சிறப்புக்கூறு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கும்போது இணைப்பூட்டல் நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு பால்நிலை குறித்த மையமொன்றை நிறுவுதல், பால்நிலை குறித்த தேர்தல் செயற்பாட்டுக் குழுவொன்றை நிறுவுவதற்கு மகளிருக்கான தேசியக் குழுவுடனும் சம்பந்தப்பட்ட மகளிர் மற்றும் தேர்தல் ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல், தேர்தல்களின்போது மகளிருக்கு எதிராக உருவாகக்கூடிய வன்செயல்களை முறியடித்தல் என்பவற்றுடன் அரசியலில் மகளிரின் பங்கேற்பை ஊக்குவித்தல் தொடர்பாக அவசியப்படும் ஏனைய நடவடிக்கைகளை எடுத்தல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

### மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்

விழிப்புணர்வு நிலையும் முனைப்பான அரசியலில் பங்கேற்பதற்கு தமக்குப் புரியக்கூடிய ஒரு மொழியிலும் வடிவத்திலும் சம்பந்தப்பட்ட தகவல்களை அணுகும் ஆற்றலும் பிரசைகளுக்கு கிட்ட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு, தேர்தல் ஆணைக்குழு பல்வேறுபட்ட அனைத்து தேர்தல் தரப்பினர்களுக்கும் ஒரு சமமான அணுகுமுறையொன்று ஏற்படக்கூடியவாறு தமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் அங்கு அவசியமான பயிற்சி துணைக்கருவிகளும் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படுகிறது. பல்லினத்தன்மைமிகு இலங்கை மக்களை பயனுறுதிவாய்ந்த விதத்தில் அறிவுறுத்தும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழு எல்லா உத்தியோகபூர்வ தொடர்பாடல் கருமங்களுக்கும் இரு மொழிக் கொள்கையொன்றைப் பின்பற்றுவது சம்பந்தமாக முன்னின்று செயலாற்றியுள்ளது. இதற்கு மேலதிகமாக அனைத்தும் அடங்கிய தேருநர்களை அறிவுறுத்தும் சர்வதேச மட்டத்திலான அதிசிறந்த பிரயோகங்களைக் காண்பித்து, வாக்குரிமை மற்றும் தகவல்கள் பற்றிய பிரசார துணைக்கருவிகளை இரு தேசிய மொழிகளிலும் தயாரித்து விநியோகிக்க தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பொன்றாக அதன் உபாயமுறைத் திட்டத்திலும் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அமைதியான, உறுதியான, சுபீட்சமான ஒரு சமூகத்தை உருவாக்கும் கூட்டு இலக்கை அடைந்துகொள்ளும் பொருட்டு எல்லாப் பிரசைகள் குழுக்களுடனும் இணைந்து செயலாற்றும் வாய்ப்பை உருவாக்கிக்கொள்வதற்கு தகுதிபெற்ற எல்லாப் பிரசைகளும் அடங்கும் தேர்தல் செயன்முறையொன்று பெரிதும் துணைவரும். தேர்தல் ஆணைக்குழு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வளங்களை பல்வேறு மொழிகளில் உருவாக்குவதற்கும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பல்லினத்தன்மையையும் இடையீட்டையும் ஒருங்கிணைப்பதற்கும், ஆணைக்குழுவின் முக்கிய நிகழ்வுகளுக்கும் வெளியீடுகளுக்கும் தேசிய மொழிகளைக் கையாள்வதற்கும் ஆணைக்குழு செயற்படுவதன் ஊடாக சனநாயகத்தைப் பலப்படுத்தும் பொருட்டு தேர்தல் முகாமைத்துவ நிறுவனமொன்றினால் ஆற்றப்படக்கூடிய முக்கிய செயற்பொறுப்பை இலங்கை தேர்தல் ஆணைக்குழு சிறப்பாக ஆற்றி வருகின்றது என்றால் மிகையில்லை.



# நாட்டின் எதிர்காலம் வாக்காளர்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது

*உங்கள் வாக்குரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தவறாமல் 2019 ஆம் ஆண்டுக்காக வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

## 2019 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீள்திருத்தம்

**கணக்கெடுப்புப் படிவம் (பீசீ படிவம்) பிரதான குடியிருப்பாளர்களுக்குக் கையளித்தல்**
2019.05.15 தொடக்கம் 2019.06.14 வரை

**கணக்கெடுப்புப் படிவம் பிரதான குடியிருப்பாளர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளல்**
2019.06.02 தொடக்கம் 2019.07.29

**பதிவு செய்துகொள்ளாதவர்களின் முறைப்பாடுகள், UE படிவங்கள் மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளல்**
2019.07.20 தொடக்கம் 2019.08.13 வரை

**பன்மைப் பதிவுகள் தொடர்பான கடிதங்கள் அனுப்புதல்**
2019.07.12 தொடக்கம் 2019.08.08 வரை

**உரிமை கோரல்கள், ஆட்சேபணைகள் சமர்ப்பித்தல்**
2019.08.15 தொடக்கம் 2019.09.11 வரை

**உரிமை கோரல், ஆட்சேபணைகளுக்கான விசாரணைகள்**
2019.08.15 தொடக்கம் 2019.10.10 வரை

**வரைபு தேருநர் இடாப்பை கிராம அலுவலரின் அலுவலகங்கள், தேர்தல் அலுவலகங்களில் காட்சிப்படுத்துதல்**
2019.10.22 தொடக்கம் 2019.10.25 வரை

**2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு உறுதிப்படுத்துதல்**
2019.10.31 ஆந் திகதி

**மேலதிக தகவல்களுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் பாராளுமன்றத் தேர்தல்கள் பிரிவு அல்லது உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

தேர்தல் ஆணைக்குழு 0112868441-42-43

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு (நகர) | 0112872247 | வவுனியா | 0242222311 |
| கொழும்பு (மாவட்ட) | 0112867472 | முல்லைத்தீவு | 0212061426 |
| கம்பஹா | 0332222047 | மட்டக்களப்பு | 0652224312 |
| களுத்துறை | 0342222266 | அம்பாறை | 0632224342 |
| கண்டி | 0812233187 | திருகோணமலை | 0262222304 |
| மாத்தளை | 0662222422 | குருநாகல் | 0372222369 |
| நுவரெலியா | 0522222325 | புத்தளம் | 0322265246 |
| காலி | 0912234028 | அநுராதபுரம் | 0252222551 |
| மாத்தறை | 0412222305 | பொலனறுவை | 0272222012 |
| அம்பாந்தோட்டை | 0472256248 | பதுளை | 0552222424 |
| யாழ்ப்பாணம் | 0212222655 | மொணராகலை | 0552276315 |
| கிளிநொச்சி | 0212285664 | இரத்தினபுரி | 0452222023 |
| மன்னார் | 0232222289 | கேகாலை | 0352222561 |

குறிப்பு: தவிர்க்க முடியாத திடீர் அல்லது வேறு அனர்த்தங்கள் காரணமாகவோ அல்லது தேர்தல் நடைபெறுவதாக இருந்தாலோ மேற்குறித்த திகதிகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

# இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்




ந.கோகுலன்
அபிவிருத்தி உத்தயோகத்தர் (பயிலுநர்) மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், வவுனியா

இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமானது போதுமானதா என்ற கேள்வி நிகழ்கால உலகில் மிக முக்கியமான கேள்வியாகும். குறிப்பாக தென்னாசிய நாடுகளைக் கருத்திற்கொள்ளும்போது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பது பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாக அமையும்.

இலங்கையின் அரசியலில் ஆங்கிலேயரின் ஆட்சியின் வரப்பிரசாதமாக ஜனநாயக முறையின் அறிமுகத்தைக் குறிப்பிடலாம். ஜனநாயக நாடொன்றில் சகல உரிமைகளும் சகலரும் அனுபவிக்கும் வகையில் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. பல ஐரோப்பிய நாடுகளிலேயே பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்கும் முன்னர் இலங்கையில் 1931ம் ஆண்டு ஆணும் பெண்ணும் சமமாக வாக்குரிமையைப் பெற்றனர்.

இதனடிப்படையில் உலக நாடுகளில் முதலாவது பெண் பிரதமர் தெரிவுசெய்யப்பட்ட நாடு எமது நாடு என்பது பெருமிதப்படத்தக்கது. ஆனால் இவ்வளவு நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் இலங்கை அரசியலைப் பொறுத்தவரை பெண்களின் நிலை என்பது மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளமை தெளிவாகின்றது.

பண்டைய இலங்கை வரலாற்றில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டை குவேனி, அனுலாதேவி, குசுமாசனதேவி ஆகியோரின் வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் கிராம சபை, நகர சபை, மக்கள் சபை ஆகியவற்றில் பெண்கள் அங்கத்தவர்களாக இருந்துள்ளார்கள் என்பவற்றுக்கு ஆதாரங்கள் உள்ளன.

அரசியலில் பெண்களின் பங்களிப்பினைக் கருதும்போது இலங்கை சர்வதேச பட்டியலில் 179ம் இடத்திலுள்ளது. இது பெண்களின் அரசியல் பங்களிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் மகளிர் அமைப்பின் 2018ம் ஆண்டுக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 190 நாடுகளை கொண்ட இப்பட்டியலில் இலங்கை 179ம் இடத்தை பெற்றுள்ளது. இலங்கையில் 225 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்தில் 13 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். இது மொத்த சதவீதத்தில் 5.8 வீதமாகப் பதிவாகியுள்ளது. இதேவேளை அமைச்சர்களாகப் பதவிவகிக்கும் பெண்கள் பட்டியலில் இலங்கை 164ம் இடத்திலுள்ளது. 47 அமைச்சர்களை கொண்ட இலங்கையில் 2 பெண் அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர். இது மொத்த சதவீதத்தில் 4.3 வீதம் என்றும் ஐக்கிய நாடுகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அரசியலில் பெண்களின் நிலையிலிருந்து விடுபடும் நோக்கில் பெண்ணியல் அமைப்புகளின் தொடர்ச்சியான போராட்டங்களினால் 2017ம் ஆண்டின் 16ம் இலக்கச் சட்டம் மூலமாக உள்ளூராட்சி சபைக்கான புதிய தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பெண்களுக்கு 25% வீத இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பெண்களின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்பப்படியாக கருதலாம். இந்நிலை சில தசாப்தங்களின் பின்னர் 25% வீதத்தை விடவும் அதிகரிக்கலாம்.

எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னிலையில் இருந்தாலும் அரசியலில் இவர்கள் பின்வாங்குகின்றனர். நிபுணத்துவம் வாய்ந்த கல்வியாளர்களாக இருப்பினும் அரசியலில் ஈடுபாடு இல்லாதிருப்பதற்கான காரணம் அவர்கள் மீது சுமத்தப்படும் குடும்பப் பொறுப்புக்கள், விமர்சனங்கள், பாலியல் ரீதியாக பெண்கள் மீது ஏற்படுத்தப்படும் வன்முறைகள், மதக் கட்டுப்பாடுகள், யுத்தம், இன மோதல்களால் ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் ஆணாதிக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதனால் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான அவசிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. 18ம், 19ம் நூற்றாண்டுகளை விடவும் பெண்களுக்கான உரிமைகள் முன்னரை விட அதிகமாக வழங்கப்படுகின்றன. ஆனால் பால்நிலை சமத்துவம் இன்னும் ஏற்படவில்லை தமது பிரச்சினைகளை வெளிப்படையாக வெளிப்படுத்தவும் பெற்றுக் கொள்ளவும் அவர்கள் வலுப் பெறவில்லை எனலாம். மேலும் தொழில்ரீதியாகவும், அபிவிருத்தி, பொருளாதார அடிப்படையிலும் பெண்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இலங்கையில் தொழில் புரியும் பெண்களின் சதவீதம் வெறுமனே 35 சதவீதம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யுத்தத்தின் பின்னரான இக்காலகட்டத்தில் வீடுகளில் பெண்களே தலைமை வகிக்கும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதிகரித்திருக்கின்ற இவ்வாறான சூழ்நிலையில் பெண்கள் முன்வந்து அரசியல்

12 ஆம் பக்கத்திற்கு...



தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் தேர்தல் பிணக்குகளின் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பெற்றுக்கொண்டுள்ள அனுபவங்கள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட விதிமுறைகள் பற்றியும் முன்னாள் மற்றும் தற்போதைய தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்ட விசேட நிகழ்ச்சியொன்று 2019.01.10 ஆந் திகதி தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்றது.



“பிரஜை” – Stories of Democracy என்னும் தலைப்பிலான குறுந்திரைப்பட விழா பற்றி ஊடகங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் – அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாடுகள்.



ஜனநாயகம் தொடர்பாக புதிய முறைகளில் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் அதனுடன் தொடர்புடைய சர்வதேச தினங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை நினைவு கூரும் முகமாக மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் தொடர்களின் விசேட சந்தர்ப்பங்கள்.



2021 ஆம் ஆண்டு குடிசன மற்றும் வீடுகள் கணக்கெடுப்பிற்காக தேருநர் இடாப்புக்களின் தகவல்களை ஈடுபடுத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவும், குடிசன மதிப்பீட்டுத் திணைக்களமும் 2019.02.01 ஆந் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன.



அரச அலுவலர்களுக்கு தகவல் தொழில்நுட்ப முறைகள் ஊடாக அத்தியாவசிய பாடநெறிகளைக் கற்றுக் கொள்வதற்கான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது பற்றி இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப முகவராண்மையினால் (ICTA) தேர்தல் ஆணைக்குழு அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட தெளிவூட்டும் நிகழ்வு.



தேர்தல் ஆணைக்குழுவின் 2017–2020 வரையான 4 ஆண்டுகளுக்கான மூலோபாயத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை தகவல் தொழில்நுட்ப முறையினூடாக இயங்கலை முறைமை மூலம் நிகழ்நிலைப்படுத்தல் பற்றி மாவட்டத் தேர்தல் அலுவலக ஊழியர்களைத் தெளிவூட்டும் செயலமர்வு 2019.03.22 ஆந் திகதி தேர்தல் செயலகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வு தேர்தல் முறைகள் தொடர்பான சர்வதேச நிறுவன (IFES) ஆலோசகர்களின் அனுசரணையுடன் இடம்பெற்றது.



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்காக தேர்தல் ஆணைக்குழு தமது சோகத்தைத் தெரிவித்த சந்தர்ப்பம்.

10 ஆம் பக்கத்திலிருந்து...

மூலம் அவர்களுக்கான தடைகளை உடைத்து தம்மை நிலைப்படுத்துவதனால் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் உள்ளன. மேற்கூறிய பிரச்சினைகள் அனைத்தும் பெண்களின் அரசியல் பிரவேசத்தின் மூலம் உடனடியாக தீர்ந்துவிட முடியாது எனினும் அவர்களது தொழில், பொருளாதார சமூகத் தடைகளை உடைக்கவும் நிபுணத்துவம் வாய்ந்த பெண்கள் முன்வந்து போராடுவது அவசியமானது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமது பிரதிநிதித்துவத்தை அதிகரித்து தமக்கெதிரான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சட்டங்களை உருவாக்கவும் அதன் மூலம் பெண்களை வலுவூட்டவும் சமத்துவத்தை நிலைநாட்டவும் பெண் அரசியல் பிரதிநிதிகளாலேயே சாத்தியமாகும் என்பது நிதர்சனமான உண்மையாகும். இக்கருத்தானது பெண்களிற்கு பெண்கள் தொடர்பான விடயங்களில் மாத்திரமே அக்கறை செலுத்தவேண்டுமென கொள்ளலாகாது.

சகல அரசியல் கட்சிகளிலும் பெண்கள் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்கி திறமையான மற்றும் செயற்றிறன் மிக்க பெண்களின் ஒத்துழைப்பை இலங்கை அரசியல் துறைக்குப் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதனூடாக நாட்டை துரித அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் மிகவும் பொருத்தமானதென்பதே எனது கருத்தாகும்.

**உசாத்துணை**

- *www.bbc.com/tamil*
  *13/01/2017 இலங்கை பெண்களுக்கு இட ஒதுக்கீடு – அதிகாரம் தருமா அரசியல் கட்சிகள்?*
- *www.epdpnews.com*
  *12/07/2017*
- *http://archieve.ipu.org/wmn-e/classif.hhtm*
  *Women in Parliaments: World Classification*

# பளிங்குச் சுவர்



## உரிமையை உறுதியாக்கினோர்

யூ.எல். முகம்மது ஜிப்ரி
தேர்தல்கள் அலுவலகம், மட்டக்களப்பு

**வருடாந்த கணக்கெடுப்பில்**
**வாக்காளர் பட்டியலில்**
**வதிவிடத்தில் பெயர் பதிவிடாமல்**
**குழப்பத்துடன் தேடிவந்து...**
**உரிமை கேட்டோருக்கு**
**பொறுமையுடன் பதிலுரைத்து**
**உரிமை உனக்குண்டு**
**ஊன்றிடு உன் வதிவிடத்தில்**
**உன்பெயரை**
**வாக்காளர் இடாப்பினிலே...**
**புழுதிக்குள் நீயில்லை!**
**புது மனிதன் நீயென்று!**
**உன் பிறப்பிற்கும்**
**உன் இறப்பிற்கும் இடையினில் - நீ**
**பதிந்திடும் - B.C. படிவத்தின் பலன்**
**உன் வாழ்க்கையின் வளம்...!**
**என்பதனை தெளிவாக்கி**
**உரிமையை உறுதியாக்கியவர்கள்**
**தேர்தல் திணைக்கள ஊழியர்கள்....!**

**ஆலோசனைக் குழு**

மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜீவன் எச். ஹூல்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க
எச். எம். ரீ. டி. ஹேரத்
ரசிக்க பீரிஸ்

**தொகுப்பாசிரியர்** - சன்ன பீ. த. சில்வா
**கணினிப் பக்க வடிவமைப்பு** - அமில கமகே
**அச்சுப் பதிப்பு** - அரசாங்க அச்சகம்
**வெளியீடு** - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு
தேர்தல் ஆணைக்குழு

**உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் எமக்கு எழுதுங்கள்**

தொகுப்பாசிரியர் – புள்ளடியின் பலம்
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை.

(+94)0112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka

இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் வெளிப்பாடன்று.